[*1996 பிப்ரவரி 23*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106--

ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்

61947---திரு. எஸ். ஆசைமணி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், திருவிழிமிழலை ஊராட்சியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் திருவிழிமிழலை ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற இந்த திருவிழிமிழலை ஆரம்ப சுகாதார நிலையம் இதற்கு முன்னாலே அரசு மருந்தகமாக இருந்து, அதற்குப் பின்னாலே அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாறி இருக்கின்ற காரணத்தால் அங்கே சில அடிப்படை வசதிகள் குறைந்து இருக்கின்றன என்று அங்கே இருக்கின்ற மக்கள் அங்கே சென்ற நேரத்திலே என்னிடம் அதை ஒரு குறையாகச் சொன்னார்கள். எனவேதான் இந்தக் கேள்வியை நான் இங்கே கேட்டிருந்தேன். ஆகவே மீண்டும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாக அல்லது அரசு மருந்தகமாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், அதேபோல் அரசு மருந்தகம் இந்த மூன்றுக்கும் நிறைய பேறுபாடுகள் உண்டு. ஆனால் அரசு மருந்தகம் என்பது அவ்வளவு பெரிய

1996 பிப்ரவரி 23]

அடிப்படை வசதிகளோடு அமைவது அல்ல. ஒரு மருத்துவரைக் கொண்டு, ஓ.பி. மட்டும் பார்த்து இயங்கக் கூடிய ஒரு இடமாக இருக்கும். ஆனால் ஆரம்பச் சுகாதார நிலையம் என்று சொல்கிற போது அதற்கு பல்வேறு கூடுதலான வசதிகள் செய்யப்படுகின்றன. இதை மாற்றுவதற்கே கூட காரணம், மத்திய அரசு ஒரு நார்ம்ஸ் வைத்திருக்கிறது. குறிப்பிட்ட 30,000 மக்கட்தொகை இருக்கின்ற இடத்திலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை நிறைவு செய்வதற்காக ஆங்காங்கே இருக்கின்ற மருந்தகங்களை இரண்டு மருத்துவமனைகள் அங்கே தேவையில்லை என்ற காரணத்தால் ஒன்றிலே கொண்டுவந்து சிறப்பாகச் செய்யவேண்டுமென்று நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எனவே மருந்தகத்திலே ஒரு மருத்துவர் என்றால், ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே 'மெடிக்கோ லீகல் கேசஸ்' பார்க்கிற ஒரு நிலை மருந்தகத்திலே இருந்திருக்கலாம் அல்லது மருத்துவமனையிலே இருந்திருக்கலாம். ஆனால் ஆரம்ப சுகாதார நிலையத்திலே இப்படிப்பட்ட வாய்ப்பில்லை. ஆனால் எங்கெங்கெல்லாம் இப்படி கன்வர்ட் செய்யப்பட்டதோ, அந்த இடத்திலே அவர்கள் அதற்கு முன்னாலே என்னென்ன பணிகளைச் செய்தார்களோ, அத்தனைப் பணிகளையும் மெடிக்கோ லீகல் கேசஸ் முதற்கொண்டு செய்யவேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்தால், அங்கேயிருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மருத்துவர்களுக்கும் தெரிவித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 103, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

103--

குடிமனைப் பட்டா வழங்குதல்

**47937--திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சி மேட்டுவயல் இந்திரா நகரில் குளம் புறம்போக்கில் குடியிருந்து வருவோருக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS